# பொதுக்காலம் 17 ஆம் வாரம்
## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

அரசர்கள் இரண்டாம் நூலிலிருந்து வாசகம். 4: 42-44,

பல்லவி: ஆண்டவரே, எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்.,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 4: 1-6,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 1-15

## திருப்பலி முன்னுரை:

இறை அன்பில் நிறைவாகப் பங்கேற்க வந்திருக்கும் அன்பின் சொந்தங்கள் அனைவருக்கும் திருமகன் இயேசுவின் பெயரால் அன்பு வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கிறேன்.

வாழ்வுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிறு திருப்பலியை கொண்டாட உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இறைவன் நமக்கு மிகுதியாக தருகிறார் என்ற கருத்தை இன்றைய திருவழிபாடு நமக்கு முன்வைக்கிறது. மக்கள் மீது பரிவு கொண்டவராய் இயேசு அப்பங்களைப் பலுகச் செய்கிறார். நம் மேல் கனிவு காட்டும் இறைவன், நமது வாழ்வில் அற்புதங்களை செய்யவும் தயாராக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். இறைவனின் செயல்பாட்டை நம் வாழ்வில் உணர, நாம் அன்போடும், தாழ்மையோடும் நம்மை அவரிடம் ஒப்படைக்க வேண்டியது அவசியம். ஆண்டவரின் அருளுஞ்செயல்களை நமது வாழ்வில் காண வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

**பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

**1. பணியாற்ற அழைப்பவராம் இறைவா,**

உம் அன்புக் குழந்தைகளாகிய திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், துறவரத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் அன்புக் கட்டளையின் பொருள் உணர்ந்து அவரின் அன்பில் இறுதி வரை நிலைத்து நின்றுப் பிறரை அன்பு செய்து வாழும் வரத்தைப் பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. இரக்கம் உள்ளவராம் இறைவா,**

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் தேவைகளில் உம்மையே நாடி வரவும், உமது இரக்கத்தால் அனைத்து நலன்களையும் பெற்று, உமக்கு உகந்த மக்களாக உருமாற்றம் பெறவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. வாழ்வளிப்பவராம் இறைவா,**

போர்ச் சூழல், வறட்சி, இல்லாமை, இயலாமை போன்ற காரணங்களால் உணவின்றி வாடுவோருக்கும், அன்பின்மை, அமைதியின்மை, நலமின்மை போன்ற துன்பங்களால் வருந்துவோருக்கும் புதுவாழ்வு வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. அற்புதங்கள் செய்பவராம் இறைவா,**

இயந்திரமாக இயங்கும் இந்தச் சமுதாயவாழ்க்கை முறையில் வேலைகளில் மூழ்கித் தத்தளிக்கும் நாம், ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் ஒதுக்கி, இறைவனுக்கும், நம்முடைய நலனுக்கும் தகுந்த இடத்தை வழங்கவும், அடுத்தவர் தேவை அதிகம் என்பதை உணர்ந்து, நமது தேவைகளை ஒதுக்கிவிட்டு, அடுத்தவருக்கு உதவிக்கரம் நீட்டும் தாராள மனதை இறைவன் நமக்குத் தரவேண்டும் என்று மன்றாடுவோம்.

**5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புரும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. ஒன்றிணைப்பவராம் இறைவா,**

நாங்கள் தூயவராக வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே எங்களுக்கு உமது திருவுளம் என்பதைத் திருத்தூதர் பவுல் வழியாக எங்களுக்கு எடுத்துரைத்தீரே நாங்கள் தூயவராக வாழ்ந்து உமது திருவுளத்தை நிறைவேற்ற எங்களுக்குத் தூயதோர் உள்ளத்தைப் பெற ஆவியாரின் கொடைகளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.